<u>சுருக்கம்</u>

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – 2021-2022 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை - மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின் புதிய அறிவிப்பு – ரூ.2330.10 இலட்சம் மதிப்பீட்டில் 1000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு துரித மின் இணைப்புத் திட்டத்தின் (Tatkal Scheme) கீழ் 90 சதவீதம் மானியம் வழங்குதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**<u>ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(சிஉதி)துறை</u>**

**அரசாணை (நிலை) எண். 7** **நாள்:10.02.2022**

**பிலவ வருடம், தை 28 ஆம் நாள்**

**திருவள்ளுவர் ஆண்டு 2053**

படிக்கப்பட்டது:-

தாட்கோ மேலாண்மை இயக்குநர் அவர்களின் கடித எண்.ஜி2/000112/2019 நாள் 31.08.2021 மற்றும் 25.10.2021.

*******

**ஆணை:-**

2021-2022 ஆம் ஆண்டிற்கான திருத்திய வரவு-செலவு கூட்டத்தொடரில் இத்துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள், கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டிருந்தார்கள் :-

**"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் கிராமப்புறங்களில் பெரும்பாலும் விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். எனவே, விவசாயத்திற்கான இலவச மின் இணைப்புக்காக தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் மூலம் வழங்கப்படும் துரித மின் இணைப்புத் திட்டத்தில் (Tatkal Scheme) செலுத்தப்பட வேண்டிய வைப்புத் தொகை குதிரைத் திறனுக்கேற்ப ரூ.2.50 இலட்சம் முதல் ரூ.4.00 இலட்சம் வரை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.**

**1000 ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின விவசாயிகள் இலவச மின் இணைப்பை விரைவில் பெற்றிட தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தால் நிர்ணயிக்கப்பட்ட வைப்புத் தொகையில் 90 சதவீதம் (ரூ.2.25 இலட்சம் முதல் ரூ.3.60 இலட்சம் வரை) மானியமாக வழங்கப்படும். இதற்காக அரசுக்கு ஏற்படும் செலவு ரூ.23.28 கோடி"**

2. மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்துவது தொடர்பாக, மேலே படிக்கப்பட்ட தாட்கோ மேலாண்மை இயக்குநரின் கடிதத்தில், விவசாயத்திற்கான இலவச மின் இணைப்புக்காக தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் மூலம் வழங்கப்படும் துரித மின் இணைப்புத் திட்டத்தில் (Tatkal Scheme) செலுத்தப்பட வேண்டிய வைப்புத் தொகை குதிரைத் திறனுக்கேற்ப ரூ.2.50 இலட்சம் முதல் ரூ.4.00 இலட்சம் வரை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது எனவும் அதனடிப்படையில் தற்போது5HP. 7.5HP. 10 HP மற்றும் 15 HP-க்கான வைப்புத்தொகை முறையே ரூ.2.5 இலட்சம், ரூ.2.75 இலட்சம், ரூ.3 இலட்சம் மற்றும் ரூ.4 இலட்சம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு ஏதுவாக 1000 விவசாயிகளின் விண்ணப்பங்களுக்கு மின் இணைப்பு அளிப்பதற்கு ரூ.2589.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு தேவையாக உள்ளது எனவும், அதில் 10 சதவீதமான ரூ.258.90 இலட்சம் பயனாளிகளின் பங்கு தொகையாகவும், மீதம் உள்ள 90 சதவீதம் ரூ.2330.10 இலட்சம் மாநில அரசின் நிதியிலிருந்து தாட்கோவிற்கு இத்திட்டத்தினை செயல்படுத்திட வழங்குமாறும் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. தாட்கோ மேலாண்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலித்து, பொருளாதார நிலையில் மிகவும் நலிவடைந்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் என்பதால் துரித மின்இணைப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் 1000 விவசாயிகளின் விண்ணப்பங்களில் 900 ஆதி திராவிடர் விவசாயிகளுக்கு இணைப்பு-I-இல் உள்ளவாறு ரூ.20,93,17,500/- மற்றும், 100 பழங்குடியின விவசாயிகளுக்கு இணைப்பு-II-இல் உள்ளவாறு ரூ.2,36,92,500/- என மின் இணைப்பு அளிப்பதற்கு 90 சதவீத மானியத் தொகையாக மொத்தம் ரூ.23,30,10,000/-க்கு (ரூபாய் இருபத்து மூன்று கோடியே முப்பது இலட்சத்து பத்தாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. மேலே, பத்தி-3-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்புகளின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

**"2225 – ஆதி திராவிடர் , பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 01 – ஆதி திராவிடர் நலன் – 102 – பொருளாதார முன்னேற்றம் – மாநிலச் செலவினங்கள் - AF - விவசாயிகளுக்கு துரித மின் இணைப்பு வழங்கும் திட்டம் – 309 – உதவித் தொகை – 03 – குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை**

**IFHRMS த.தொ.கு.2225 01102 AF 30903"**

**"2225 – ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 02 – பழங்குடியினர் நலன் – 102 – பொருளாதார முன்னேற்றம் – மாநிலச் செலவினங்கள் – AC - துரித மின் இணைப்பு வழங்கும் திட்டம் – 309 – உதவித்தொகை – 03 – குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை**

**IFHRMS த.தொ.கு.2225 02 102 AC 30903"**

5. மேலே, பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு "புதுப்பணி" குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வரவு-செலவு (பொது-I)) துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். அடுத்து வரும் துணை மானிய கோரிக்கையில் இச்செலவினம் கொணர்ந்து சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பெறும் வரையிலான காலத்திற்கு தேவையான நிதியினை சரியாக கணக்கிட்டு 1963 எதிர்பாரா செலவு நிதி விதிகளில் குறிப்பிட்டுள்ள அட்டவணை "A"-ஐ பூர்த்தி செய்து எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெற இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வரவு-செலவு (பொது-I)) துறைக்கு அனுப்பிவைக்குமாறும், மேலும், இக்கூடுதல் செலவினத்தினை 2021-2022 ஆம் நிதியாண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது நிதி (ஆதி(ம)பந/வ.செ.(பொது-I)) துறைக்கு அனுப்பிவைக்குமாறு ஆணையர், ஆதிதிராவிடர் நலத்துறை அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

6. மேற்கண்ட புதிய கணக்குத் தலைப்பு 2225-01-102-AF-30903-ற்கு ஆதி திராவிடர் நல ஆணையர் மற்றும் 2225-02-102-AC-30903-ற்கு பழங்குடியினர் நல இயக்குநர் அவர்கள் மதிப்பீடு, கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரிகளாவார்கள். சம்பந்தப்பட்ட மாவட்ட சம்பளக் கணக்கு அலுவலர் / கருவூலக் கணக்கு அலுவலர் மேற்கண்ட புதிய கணக்குத் தலைப்பினை தங்கள் கணக்குகளில் துவக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

7. மேலே பத்தி 3-இல் ஒப்பளிப்பு செய்யப்படும் தொகை தாட்கோ நிறுவனத்திற்கு பணமாக வழங்காமல் தாட்கோவின் கீழ்க்காணும் அலுவலர் பெயரில் வைப்புத் தொகை கணக்குத் தலைப்பில் IFHRMS-ல் காசோலை/வரைவோலை மூலம் எதிர்வரவாக வரவு வைக்குமாறு ஆதிதிராவிடர் நல ஆணையர் / பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**K – வைப்பீடுகள் மற்றும் முன்பணங்கள் (b) வட்டி பெறாத வைப்புத் தொகைகள் – 8443-00-உரிமையியல் வைப்புத் தொகைகள் – 800 – பிற வைப்புத் தொகைகள் – BY – தமிழ்நாடு வீட்டு வசதி வளர்ச்சி கழக வைப்புத் தொகைகள் – தாட்கோவின் வைப்புத் தொகைகள் ( தாட்கோ) – 801 வரவுகள் – 02 வட்டி பெறாதவை. 802 – வழங்குதல் -02- வட்டி பெறாதவை.**

**(IFHRMS த.தொ.கு 8443 00 800 BY 801 02) (Receipt)**
**(IFHRMS த.தொ.கு 8443 00 800 BY 802 02) (Outgo)**

8. மேலே பத்தி 3-இல் தெரிவிக்கப்பட்டவாறு அரசு மானியத்தில் துரித மின் இணைப்பு பெறும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகள், தங்கள் நிலங்களை அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு விற்பனை செய்யக் கூடாது என்ற நிபந்தனையுடன் கூடிய உறுதிமொழி ஆவணம் பெறப்பட்ட பின்னர் இத்திட்டத்தினை செயல்படுத்த வேண்டும் என தாட்கோ மேலாண்மை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இவ்வாணை நிதித்துறையின் இசைவுடன், அத்துறையின் அ.சா.எண்.4610/நிதி(ஆதி(ம)பந,) நாள்.09.02.2022 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண். 1577(ஆயிரத்து ஐநூற்று எழுபத்து ஏழு)உடன் வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

க. மணிவாசன்,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்:-
ஆணையர் , ஆதி திராவிடர் நலம், சென்னை-5.
இயக்குநர் ,பழங்குடியினர் நலம், சென்னை- 5.
மேலாண்மை இயக்குநர் , தாட்கோ , சென்னை -18.
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்,
(ஆதி திராவிடர் நலம், ஆணையரகம் வழியாக)
அனைத்து மாவட்ட மேலாளார் , தாட்கோ.
(மேலாண்மை இயக்குநர் , தாட்கோ, வழியாக)
மாநில கணக்காய்வுத் தலைவர் ,சென்னை -9/18/35.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் , சென்னை -5/9.
மாவட்ட திட்ட அலுவலர் ,( பழங்குடியினர் நலம்)
நகல் :-
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம் ,சென்னை-9.
ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு
நேர்முக உதவியாளர் , சென்னை -9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல முதன்மைச்செயலாளரின் தனிச் செயலாளர் , சென்னை-9.
நிதி (ஆதி (ம)பந)/ வரவு-செலவு (பொது-I/II/வ.வ-I) த்துறை , சென்னை -9.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (அநமு-1/ஆதிந-5/ப.மே-1)த்துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு /உதிரி நகல்கள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

சி. [signature]
10/2/2022
பிரிவு அலுவலர்

திரு
10.2.2022